தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

ஆணை நாள். 13.11.2026

முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண். SA 16104/F/2023

திரு.பி.நல்லதம்பி, -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 201.

******

இறுதி ஆணை

இவ்வாணையம் 28/01/2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திருமதி.பா.நிறைமதி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், சின்னசேலம் வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் 13.11.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். மேலும், ஆணையத்தால் 26.02.2026 அன்று நேரில் ஆஜராகி அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்பட்டிருந்த நிலையில், ஆணையத்தின் உத்தரவினை அலட்சிய நோக்குடன், சிறிதும்பொருட்படுத்தாமல், பொதுத் தகவல் அலுவலர் 13.11.2026 அன்று தான் அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும் பொதுத் தகவல் அலுவலர் மனுதாரருக்கு தகவல்கள் த.அ.உ.ச2005/சி.ப.2005/2023, நாள் 25.02.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் ஒப்புகை அட்டையுடன்கூடிய பதிவஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் Tracking Consignment-ன் நகல், மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல், மனுதாரருக்கு இழப்பீட்டு தொகை ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)-யினை வங்கிவரைவோலையின் மூலமாக மனுதாரருக்கு வழங்கப்பட்டு, அதனை மனுதாரரும் பெற்றுக்கொண்டு மனநிறைவு

கடிதம் அளித்துள்ளதாகத் தெரிவித்த அதன் நகல் ஆகியவற்றினை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து, ஏற்று, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.

ஒம்/- (வி.பி,ஆர். இளம்பரிதி)
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

வழக்கு எண். SA 16104/F/2023

பெறுநர்

பொது அதிகார அமைப்பு

மாவட்ட ஆட்சித் தலைவர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர் /
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சின்னசேலம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 201.

மனுதாரர்

திரு.பி.நல்லதம்பி,
எண்.2/72, மாரியம்மன் கோவில் தெரு,
கூகையூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
சின்னசேலம் மாவட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 301.

நகல்

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For follow up)

Copy to: File NS/PA-